Water Hyacinth as compost.

* 259 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to utilise water hyacinth as compost for the growth of agricultural produce; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

Indo-German Project in the Nilgiris district

* 260 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any consultancy service has been started by the Indo-German Nilgiris Development Project in the Nilgiris district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) நீலகிரி மேம்பாடு திட்டத்தின் கீழ் நடைபெறுகிற பணிகள் மாவட்ட வேளாண்மை அலுவலர் தலைமையில் செயல்படுகிறது.

பருத்தி உற்பத்தி

* 261. **வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் 1972-73-ல் விளைந்த பருத்தியின் அளவு எவ்வளவு ?

(இ) அது நமது மாநிலத் தேவையினை பூர்த்தி செய்வதாக இருந்ததா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) மூன்றுலட்சத்து, ஐம்பதாயிரம் பேல்கள் பஞ்சு தமிழ்நாட்டில் உற்பத்தியாகிறது. பேல் என்பது 180 கிலோ.

(இ) இல்லை.

1974 சனவரி 30]

திரு. ஏ. சுப்பிரமணியம் : தமிழகத்திலே பருத்தி வளர்ச்சியை அதிகப் படுத்த தீவிரத் திட்டம் ஒன்று இயங்குவதாகச் சொல்லப்பட்டது. அதன் பலன் எந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். எத்தனை ஏக்கரா கூடுதலாகப் பயிரிடப்படுகிறது என்றும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தீவிரத் திட்டம் என்பது ஒரு ஏக்கராவில் எவ்வளவு அதிகம் உற்பத்தி செய்வது என்பதைப் பொறுத்தது தான். மொத்தத்தில் தமிழகத்தில் 8½ லட்சம் ஏக்கரா பருத்தி பயிரிடப் பட்டது என்ருல் இப்போது 7½ லட்சம் ஏக்கராவாகக் குறைந்துதான் இருக் கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : கிட்டத்தட்ட ஒரு லட்சம் ஏக்கரா பருத்தி சாகு படி குறைந்ததற்குக் காரணம் என்ன ? பருத்தி வெளிமாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்யப்படவேண்டியிருப்பதால், நிலப்பரப்பு குறையாமல் இருக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : நிலத்தின் அடியில் இருந்து நீரை வெளிக் கொணரும் முயற்சிகள் அதிகமாகிவிட்டதால் வேறு அதிக வருவாய் தரக்கூடிய—நெல், நிலக்கடலை, கரும்பு, மஞ்சள் போன்ற பயிர்களை வைக்க ஆரம்பித்துவிட்ட காரணத்தினுல், நிலப்பரப்பு பருத்தி சாகுபடிக்குக் குறைந்து விட்டது.

திரு. நா. வீராசாமி : பெரும்பாலும் பருத்தி சாகுபடி கோவை மாவட்டத்தை நம்பியிருக்கிற காரணத்தினுல், நிலப்பரப்பு குறைந்திருக்கிறது. வடாற்காடு போன்ற மாவட்டங்களிலும் பருத்தி சாகுபடி செய்ய உற்சாகப் படுத்தினுல் நிலப்பரப்பை அதிகப்படுத்த முடியாதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : அந்த முயற்சியும் எடுக்கப்பட்டு வருகிறது. இராமநாதபுரம், நெல்லை போன்ற இடங்களிலும் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது என்ருலும் கோவை மாவட்டத்தில் விளைச்சல் அதிகமாக இருக்கிறது. விளைச்சலை அதிகப்படுத்தவும் வேறு முறைகளைக் கையாள அர சாங்கத்திடம் திட்டம் இருக்கிறது. குறிப்பாக இடைப் பயிராக 2 ஆம் போகம், 3 ஆம் போகம் அதே நிலத்தில் பருத்தி சாகுபடி செய்ய தஞ்சை, வடாற்காடு போன்ற மாவட்டங்களில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, பருத்தி விளைச்சல் குறைவதற்குக் காரணம், ஒன்று, பருத்தி விவசாயம் செய்கிறவர்களது உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறதென்பது. இரண்டாவது, உரம், பூச்சி மருந்துகள் ஆகியவை போதுமான காலகட்டத்திலே கிடைக்காததுமாகும். இந்தத் தொந்தரவு பொறுக்க முடியாமல், கடலை பயிரிடுகின்ற விவசாயிகள் எங்கள் பகுதியிலே அதிகமாக ஆகியிருக்கிறார்கள். இதனால், எந்த அளவு பருத்தி பயிரிடவேண்டுமென்று திட்டமிடுகிறோமோ அந்த அளவு பூச்சி மருந்துகள் பூரணமான, நியாயமான, ஒத்தாசையான விலையில் கிடைக்குமானால், பருத்தி உற்பத்தியை அதிகப்படுத்த முடியும். அதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சென்ற முறை கேட்டபோதுகூட நான் பதில் சொன்னேன் மாண்புமிகு உறுப்பினர் பகுதியிலே எந்த ஊரில் பூச்சி மருந்து இல்லாமலிருக்கிறது என்று கேட்டேன். அவர் இன்னும் சொல்லவில்லை. பூச்சி மருந்துகளை இலகுவாகக் கொடுக்க முடியும். ஆனால், பருத்தியைவிட நிலக்கடலைக்குக் குறைவாக பூச்சி மருந்து வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் என்னால் நம்ப முடியவில்லை. ஏனென்றால், நிலக்கடலைக்குக் கூட பூச்சி மருந்து ஏராளமாகத் தேவைப்படுகிறது.

இப்பொழுது பருத்தி உற்பத்தி குறைவதற்குக் காரணம், அதிகமான நீர் கிடைக்கிற காரணத்தினால் நிலத்து நீரை அதிகமாக எடுக்கின்ற காரணத்தினால் வேறு பயிர்களை உற்பத்தி செய்வதால் வருமானம் அதிகமாகிறது. குறிப்பாக நான் கோவையைப்பற்றிச் சொல்லவில்லை, மற்ற மாவட்டங்களைப்பற்றிச் சொல்கிறேன். உங்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ, இராமநாதபுரம் மாவட்டத்திலே அரிசி உபரியாக உற்பத்தியாகிறது. இராமநாதபுரம் மாவட்டம் என்று சொன்னால் உடனே அது பஞ்சப் பிரதேசம் என்று நினைத்துக்கொண்டிருப்பார்கள். ஆனால், அங்கு கிணறுகள் வெட்டி, நிலத்து நீரை அதிகமாக எடுத்திருக்கிற காரணத்தினால் அந்த மாவட்டம் இப்பொழுது உபரி மாவட்டமாக இருக்கிறது. இப்படி இருப்பதால் முன்னால் பருத்தி விளைவித்த நிலங்கள் இப்பொழுது அதிகப் பணம் கொடுக்கக் கூடிய பயிர் நிலங்களாக மாறியிருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், தமிழ் நாட்டிற்குத் தேவை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன். 3½ லட்சம் பேல் உற்பத்தி ஆகிறது என்று சொன்னார்கள். லாங் ஸ்டேப்பில் காட்டன், குறிப்பாக, கோயம்பத்தூரிலே பல்லடத்திலும், மதுரையிலே திண்டுக்கல் தேனியிலும் இராமநாதபுரத்தில் ராஜபாளையம் ஆகிய பகுதிகளிலும் உற்பத்தி செய்யப்படுகிறதே, அதை

உற்பத்தி செய்பவர்களுக்குப் போதுமான உதவியை, இன்டன்சிவ் கல்டிவேசன் என்று 'பாடி'யிலே செய்கிற மாதிரி, அரசு இதற்கும் செய்ய உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே 205 ஆலைகள் இருக்கின்றன. தேவையான பஞ்சு 11 இலட்சம் பேல் ஆகும். அதிலே ஏறத்தாழ 3 இலட்சம் பேல்களைத் தவிர, மற்ற தேவையெல்லாம் பிற மாநிலங்களிலிருந்து, வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்படுகின்றன, இறக்குமதி செய்யப்படுகின்றன. குறிப்பாக, நீண்ட இழைப் பருத்தி 'சுஜாதா' கோவை மாவட்டத்திலே உற்பத்தியாவதற்கு முன்னால் வெளிநாட்டிலிருந்துதான் வந்துகொண்டிருந்தது. கோவையிலுள்ள ஆலை முதலாளிகள், கோவையிலே உற்பத்தி செய்வதை வாங்கப் பிரியப்படாமல், வெளிநாடுகளிலிருந்து வரவழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், கோவையில் உற்பத்தியாகிற நீண்ட இழை பருத்தி 'சுஜாதா' பம்பாயிலே கட்டாவ் மில்லுக்கும் மஃபட்லால் மில்லுக்கும் கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுதுதான் லக்ஷ்மி மில் முதலாளிகள் சம்மதித்து, அங்கேயே வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். நீண்ட இழைப் பருத்தியை, அதிக அளவில் உற்பத்தி செய்ய உற்சாகப்படுத்தி, அதற்கு வேண்டிய உதவிகளை அரசு கொடுத்து வருகிறது. அதன் மூலமாக, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவது குறைவாக இருக்கும். கோவையில்தான் அதிகமாக இருக்கிறதே தவிர, மற்ற இடங்களில் இன்னும் அதிகமாக வரவில்லை.

Finance Corporation for Panchayats

* 262 *Q*.—THIRU N. DENNIS:
THIRU N. K. PALANISWAMY:— Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) when the Finance Corporation for the Panchayats is to be set up; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இல்லை.